## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

## நேரம் வினா எண் 330.
## தலைப்பு: "பெண்களும் சமுதாய பிரச்சினைகளும்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 42-48 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி: ஸ்வாமி இன்று வேடிக்கையான சில விஷயங்களை பற்றி பலரும் பேசுவதை கேட்கிறோம்.
பெண் சுதந்திரம் பற்றி பேசுகிறார்கள்.பண்டைகாலம் தொட்டே பெண்களுக்கு உரிய இடம் தரப்படவில்லை என கூறுகிறார்கள்.
எப்போதுமே பாலின வேறுபாடு பார்க்கப்பட்டதாகவும் பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை எனவும் கூறுகிறார்கள்.ஆண்களுக்கு இணையான உரிமை வேண்டும் என கேட்டு பெண்களும் போராடுகிறார்கள்.இந்த சமுதாயத்தில் பெண்களின் பங்கு எத்தகையது என்று எங்களுக்கு தயவுசெய்து எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
ஆன்மீக ரீதியாக எந்த வேறுபாடும் இல்லை.படைப்பில் உடல் ரீதியாக வேறுபாடு இருக்கலாம்.
ஆனால் இருவருக்கும் ஆத்மா ஒன்று தான். அதனால் இருவருமே அவரவர்களுக்கான கடமையை செய்திடல் வேண்டும்.
ஆணும் பெண்ணும் சமுதாயத்திற்கு இரண்டு கண்கள் போல. இரண்டு கைகள் போல.இரண்டு கால்கள் போல ஆவர்.ஒருவர் எதிர்மறை மற்றொருவர் நேர்மறை சக்தி ஆவர்.சிருஷ்டியின் இயக்கத்திற்கு இந்த இரண்டு சக்திகளுமே தேவைதான்.
பரமேஸ்வரன் அர்தநாரீஸ்வரர் என அழைக்கப்பட காரணம் அவர் தன் உடலின் பாதியை உமையவளுக்கு அளித்தது தான்.
சிருஷ்டி அதாவது கண்ணுக்கு தெரிகின்ற திடபொருள் அல்லது ஜட பொருளாக ஆண்களும்
சிருஷ்டி இயங்குவதற்கான கண்ணுக்கு தெரியாத சக்தியாக பெண்களும் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.அதனால் தான் பெண் ஆதிசக்தி பராசக்தி என்று போற்றப்படுகிறார்.
நம் பாரத கலாசாரத்திலே பெண்களுக்கு எப்பேற்பட்ட இடம் கொடுக்கப்பட்பிருக்கிறது என பார்ப்போம்.

பாரத கலாசாரத்திலே பெண்கள் பக்திக்கும் புத்தி கூர்மைக்கும் தியாகததிற்கும் அடையாளமாக பார்க்கப்படுகிறார்கள்.

பல சமயங்களில் அவர்கள் தங்களுடைய கணவனுக்கு தகுந்த நல் ஆலோசனைகள் வழங்கி வந்திருக்கிறார்கள்.
சாவித்திரி மண்டோதரி சீதா அனுசுயா தாரா தமயந்தி மடலாஸா தரௌபதி இவர்களே இத்தகைய நற்பண்புகளுக்காக போற்றப்படுகிறார்கள்.
த்ரௌபதி தன் ஐந்து கணவர்களுக்கும் பணி செய்து திருப்தியுடன் வாழ்ந்தார்.
மண்டன மிஸ்ரருக்கும் ஆதி சங்கரருக்கும் விவாதம் நடந்த போது நடுவராக இருந்து ஆதிசங்கரே வெற்றி பெற்றார் என தீர்ப்பு வழங்கிய உபய பாரதி மண்டன மிஸ்ரரின் மனைவி ஆவார்.
பண்டைய பாரதத்தில் கார்கி மற்றும் மைத்ரேயி இருவரும் சிறந்த புலமைக்கும் ஆன்மீக சாதனைகளைக்கும் எடுத்து காட்டாக திகழ்ந்தார்கள்.
சக்ரவர்த்தி சிவாஜி மற்றும் காந்திஜி இவர்களுடைய வளர்ச்சியில் அவர்களுடைய தாய்மார்கள் ஆற்றிய பெரும் பங்கு பற்றி நீங்கள் கேள்வி பட்டிருக்கிறீர்கள் தானே.

தங்களுடைய தாயின் மடியில் தான் அவர்கள் இருவரும் வாழ்க்கை பாடங்களை கற்று கொண்டனர். கௌஸல்யா மற்றும் ஸீதா இவர்களுடைய அன்பினாலும் ஊக்கத்தினாலும் தானே ஸ்ரீ ராமரும் இரட்டையர்களான லவ குஸர்களும் தர்மத்தின் வழியில் நின்று உலகத்திற்கே முன்னுதாரணமாக வாழ்க்கை நடத்தினார்கள்.
தினசரி பிரார்த்தனையில் மாத்ரு தேவோ பவ என கூறுகிறீர்களே.
பெண்ணின் பெயருக்கு அடுத்த படியாக தானே ஆணின் பெயர் வருகிறது
-ஸீதாராமா லக்ஷ்மிநாராயணா,கௌரிசங்கர் என்று.நமது பண்டைய பாரத கலாசாரத்தில் பெண்கள் துன்புறுத்தப்பட்டதாகவோ உதாசீனப்படுத்தப்பட்டதாகவோ மரியாதை குறைவாக நடத்தப்பட்டதாகவோ சரித்திரமே இல்லை.தாய் நாடு தாய் மொழி என்றெல்லாம் சொல்லி பெண்மையை உயர்வாகத்தானே போற்றுகிறோம்.

பகவத்கீதை பெண்களிடம் ஏழு விதமான சக்திகள் இருப்பதாக உயர்வாக குறிப்பிடுகிறது.
வீட்டை நிர்வகிப்பவர் இல்லாலு அதாவது இல்லத்தரசி.கணவனை தக்க ஆலோசனைகள்சொல்லி தர்மத்தின் வழியில் நடத்துபவர் சகதர்ம காரிணி.
பெண்ணே க்ருஹ லட்சுமியும் ஆவார்.அதாவது செல்வம் வளமை அமைதி ஆனந்தம் இவைகளை குடும்பத்திற்கு கொண்டு சேர்ப்பவர் பெண்ணே.இவரே அர்தாங்கி அதாவது கணவனில் பாதியும் ஆவார்.
பெண்ணே பொறுமை தியாகம் சகிப்புத்தன்மை மரியாதை பணிவு கீழ்படிதல் இத்தகைய மேலான குணங்களை இயல்பிலேயே கொண்டவராக இருக்கின்றார்.ஆண்களிடம் இந்த குணங்கள் இருப்பதில்லை.தன் கணவனுக்காகவும் குழந்தைக்காகவும் உயிர் தியாகம் செய்ய கூட பெண் தயாராக இருக்கிறார்.
பல்வேறு இன்னல்களை எதிர் கொண்டு குடும்ப முன்னேற்றத்திற்காகவும் குடும்ப நலனுக்காகவும் பெண்ணே அயராது பாடு படுகிறார்.
பெண்களே தேசத்தின் முதுகெலும்பு.
குடும்பத்தின் வெளிச்சமும் ஆனந்தமும் பெண்ணே ஆவார்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உலக வாழ்க்கையில் நல்லதொரு மாற்றம் நிகழத்தானே வேண்டும்.ஆனால் இன்றோ சமுதாயத்தில் அனைத்துமே மாசடைந்து வெறுக்கத்தக்கதாகவும் ஏமாற்றமளிப்பதாகவும் உள்ளதே.
இந்தநிலையில் நல்லமாற்றம் எப்படி சாத்தியமாகும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
சொல்லப் போனால் கிராமங்களில் வாழுகின்ற படிப்பறிவில்லாத வெகுளியான கிராமியத்தனம் கொண்ட அந்த மனிதர்களிடம் நிலவுகின்ற சந்தோஷம் மன நிறைவு நெருக்கம் இவைகளெல்லாம் மெத்த படித்த மேட்டுக்குடி நாகரீக வாசிகளான நகரத்தில் வாழ்கிறவர்களிடம் அறவே இல்லை.அவர்கள் அகந்தையும் பொறாமையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.
சமுதாயத்தில் நல்ல தொரு மாற்றம் ஏற்பட வேண்டுமென்றால் முதலில் நகரத்து வாசிகள் தான் நல்லவர்களாக மாற வேண்டும்.
தங்களிடமுள்ள தீய குணங்களான அகந்தை கர்வம பொறாமை வெறுப்பு இவைகளை விட்டுவிட பாடுபட வேண்டும்.
வெண்ணெய் மிகவும் மென்மையானதுதான்.ஆனால் அதை உருக்குவதற்கு நெருப்பில் இடத்தானே வேண்டும்.நல்ல மாற்றம் வேண்டும் என்றால் சமுதாயம் அதற்காக உழைக்க வேண்டும்.
நல்லவர்களிடமிருந்து நல்லனவற்றை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.இந்த ஸ்ரவணம் என்பதே முதல் படியாகும்.
கேட்பதுடன் நின்றுவிட கூடாது.நீங்கள் கேட்ட நல்லனவற்றை மீண்டும் மீண்டும் மனதில் கொண்டு வந்து நினைவு படுத்தி கொண்டே இருக்க வேண்டும்.இதுவே மனனம் என்பதாகும்.நினைவுபடுத்திய வண்ணம் அவற்றை உங்கள் நடத்தையில் கடைபிடிக்க வேண்டும்.இதுவே நிதித்யாஸானம் என்பதாகும்.

நீங்கள் உட்கொள்கின்ற உணவு உங்கள் வீட்டு சமையலறையில் தயாராகிறது.பின் அது சாப்பிடும் அறைக்கு எடுத்து வர படுகிறது. இந்த உணவை உட்கொண்டவுடன் அதிலிருந்து பெறப்படும் சத்து உடலின் எல்லா பகுதிகளுக்கும் எடுத்து செல்ல பட்டு போஷாக்கை அளிக்ககிறது.
அது போலவே ஸ்ரவணம் என்பது உணவு தயார் செய்வது போல.மனனம் என்பது உணவை மேசைக்கு எடுத்து வருவது போல.நிதித்யாஸானம் என்பது சாப்பிட்ட உணவு ஜீரணமாகி சக்தி கிடைப்பது போல.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் எப்போதும் அவசர கதியில் இருக்கின்றோம்.
நாங்கள் வேலை நிமித்தமாக பல இடங்களுக்கும் ஓடி ஓடி செல்ல வேண்டியிருக்கிறது.இது போன்ற அவசர வாழ்க்கை முறையில் நாங்கள் ஆன்மீகத்தில் ஈடுபட முடியுமா.
ஆன்மீகத்திலும் நாங்கள் அவசரமாக வேகமுடன் செயல்படலாமா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இன்றைய காலத்தில் மனிதர்களின் பல்வேறு நோய்களுக்கும் காரணம் மூன்று விடயங்கள் தான்.
அவசரம் ,கவலை  மற்றும் உணவு பழக்கம் இவை தான் காரணம்.
அவசரமாக செயல்படுவதுஆற்றல் வீணாவதற்கும் கவலைகள் உண்டாவதற்கும் காரணமாகிறது.
எனவே அவசரமாக வேகமாக செயல்படுவதை தவிர்த்திடுங்கள்
நிதானத்துடன் செயல்படுவது இன்றைய காலத்தில் மிக முக்கியமானதும் தேவையானதுமாகும்.அதனால் தான் என்னுடைய முந்தைய ஷீரடி அவதாரத்தில் நான் ஸ்ரத்தா ஸபூரி இரண்டையும் வலியுறுத்தினேன்.
அலுவலகத்திற்கு நேரத்திற்கு செல்ல வேண்டும் என்பதற்காக பலரும் பஸ்ஸையோ ட்ரெய்னயோ பிடிப்பதற்கு அ வசரமாக ஓடுவதை பார்க்கிறோம்.
அனால் திரையரங்குகளில் நீண்ட வரிசையில் மனிதர்கள் காத்திருப்பதையும் பார்க்கிறோம்.
ஆனால் இங்கே குல்வந்த் ஹாலிலே உங்கள் கைகடிகாரத்தை அடிக்கடி பார்த்து ஸ்வாமி ஏன் இன்னும் தரிசனம் கொடுக்கவரவில்லை என நினைக்கிறீர்கள்
உண்மையான ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்றால் நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும்.கடவுளால் நிச்சயிக்கப்பட்ட படி எதுவுமே முன் குட்டியே திட்டமிடப்பட்டு சரியான தருணத்தில் நிகழ்கிறது.
அர்ஜுனன் தன் எழுபத்தி நான்கு வயது வரை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து பகவத் கீதை உபதேசம் பெற காத்திருக்க வேண்டியிருந்தது.
அது போல் நீங்களும் காத்திருக்க வேண்டும்.என்ன இது ஸ்வாமி என்னுடன் பேசவில்லையா என நீங்கள் அவசர பட கூடாது.சரியான நேரத்தில் நான் உங்களுக்கு வேண்டியதை செய்வேன்.எப்படி நன்கு பழுத்த ஒரு பழம் தானாகவே மரத்திலிருந்து உதிர்கிறதோ அது போல காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டும்.ஆன்மீக பாதையில் நீங்கள் அவசரமாக வேகமாக செயல்பட கூடாது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இன்றைய உலகின் போக்கு பணம் சம்பாதிப்பதில் தான் இருக்கிறது.அதனால் மனிதர்களிடம் அகந்தையும் கர்வமும் கட்டுக்கடங்காமல் போய் விட்டது.
இத்தகைய போக்கை மாற்றுவது எவ்வாறு ஸ்வாமி.
ஸ்வாமியின் பதில்:
பூமி சூரியனை சுற்றி வருகிறது
அது போல் மனிதன் பணத்தை சுற்றி வருகிறான்.பணம் அவனுக்கு வசதிகளையும் சௌகரியங்களையும் பெற்று தரும்.ஆனால் பணத்தால் வாங்க முடியாதது பல இருக்கின்றன.
பணத்தை கொண்டு ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்து உண்ணலாம்.ஆனால் அதற்கான பசியை பணத்தால் வாங்க முடியுமா.

ஒரு நல்ல சுகமான மெத்தையை பணத்தால் வாங்கலாம்.ஆனால் தூக்கத்தை பணம் கொண்டு வாங்க முடியுமா.
விலையுயர்ந்த மருந்துகளையும் கூட பணத்தால் வாங்கி விடலாம்.ஆனால் ஆயுளை வாங்க முடியுமா.பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்தால் அது தவறு.
செல்வத்தினால் தீய விளைவுகளே அதிகமாக ஏற்படுகின்றன.
உங்களிடம் இரண்டு முக்கியமான வளங்கள் இருக்கின்றன.
ஒன்று தலை.மற்றோன்று ஹிருதயம்.
தலை வெளி உலகம் பற்றிய அதாவது சிருஷ்டி சம்பந்தமான பல்வேறு அறிவையும் தேடி பெருகிறது.
ஹிருதயமோ உள்புற அமைதியை தேடுகிறது.தியாகம் சத்யம் அன்பு இரக்கம் கருணை இது போன்ற உணர்வுகள் ஹிருதயத்தில் இருந்து தான் வருகின்றன.நீங்கள் வெளி உலகில் பார்ப்பதெல்லாம் ஆரட் தான்.ஹார்ட் உள்ளே இருக்கிறது.
ஆயிரம் மின்சார விசிறிகளை கொண்டு பெறப்படும் காற்று இயற்கை காற்றுக்கு ஈடாகுமா.குளத்திலும் ஏரியிலும் நதியிலும் இருக்கின்ற நீர் மழை நீருக்கு ஈடாகுமா.கடவுள் எங்கும் நிறைந்த வர்.அவருக்கு முன் மனிதன் சிறு துரும்பே.அவ்வாறு இருக்கும் போது அகந்தையும் கவர்மும் எதனால் வருகிறது.மலைகள் பிமாண்டமாக உயர்ந்து நிற்கலாம்.அதில் உற்பத்தி ஆகின்ற நீர் கீழே விழுந்து தானே ஆக வேண்டும்.
அது போல நீங்கள் சிறந்த பண்டிதராகவும் செல்வந்தராகவும் இருக்கலாம்.ஆனால் அகந்தையும் கர்வமும் ஏற்பட்டால் நீங்கள் வீழ்வது திண்ணம்.நெருப்பு எப்போதும் மேல் நோக்கி தான் செல்லும்.அது போல் உங்கள் ஆன்மீக அறிவு உங்களை மேல் நோக்கி அழைத்து செல்ல வேண்டுமே தவிர நீங்கள் ஒரு போதும் கீழே இறங்கி விடக் கூடாது.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்.
ஜெய் சாயிராம்.